செய்தி வெளியீடு எண்: 173 நாள்: 27.02.2019

# செய்தி வெளியீடு

கோயம்புத்தூர் மாவட்டம், பி.என் புதூரைச் சேர்ந்த திரு. அருணாச்சலம் முருகானந்தம் அவர்களது சேவையை பாராட்டி, குறும்படம் வெளியாகி, அக்குறும்படத்திற்கு ஆஸ்கார் விருது கிடைத்ததையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.2.2019) அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:

"கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாங்கள் உருவாக்கிய மலிவு விலை நாப்கின்கள் பெண்களிடையே சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை பெரிய அளவில் ஏற்படுத்தியுள்ளது. உலகளவில் உள்ள பல்வேறு நாளிதழ்களில் உங்களைப் பற்றிய பல கட்டுரைகள் வெளிவந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைந்தேன்.

மேலும் உத்தரபிரதேச மாநிலத்தில் ஒரு கிராமத்திற்கு நீங்கள் வழங்கிய நாப்கின் தயாரிக்கும் இயந்திரம் மூலம் அந்த கிராம மகளிர் நாப்கின் தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவதை மையப்படுத்தியும், தங்களது சேவையை பாராட்டியும் குறும்படம் வெளியாகி, அக்குறும்படம் ஆஸ்கார் விருது பெற்றமைக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் இதுபோன்ற பல்வேறு சாதனைகள் படைத்திட எனது அன்பான நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை .9.**